"இரக்கமும் எதிர்நோக்கும்"

# Diocesan News Letter

## VELLORE

(FOR PRIVATE CIRCULATION ONLY)

Vol. 21 October - 2025 No. 10





Shepherd's Voice

## *"Heralds of Hope with Mary, the Star of Evangelization"*

Dear Brothers and Sisters in Christ,

Peace and missionary joy to each of you!

The month of October is a special time of missionary awakening in the life of the Church. It is a time to remember that the Church does not exist for herself, but is sent into the world-as the very word "Church" (ekklesia) suggests-a community called out and sent forth to witness, serve and proclaim the Gospel of hope.

This year, the World Mission Sunday, to be celebrated on 19 October 2025, comes to us with the theme: "Heralds of Hope among the People." What a timely and powerful reminder in our world today-marked by despair, disillusionment, conflict, and loneliness-that each of us, by baptism, is a bearer of the Good News, a herald of hope, a living sign of God's love for the world.

**Mission is the Heartbeat of the Church**

The mission is not an activity we do once a year-it is our identity. Pope Francis reminds us: "The Church is missionary by her very nature." As members of the Diocese of Vellore, we are part of this universal movement of love and proclamation. Whether we are priests, religious, lay faithful, youth, or children-we all share in this vocation: to be signs of Christ's presence wherever we are planted.

Let us ask: Am I a herald of hope in my family? In my village or parish? In my workplace? In the Church?

**Our Lady of the Rosary: The First Missionary Disciple**

In this missionary month, we also celebrate the Feast of Our Lady of the Rosary (7 October). Mary is the Star of Evangelization-the first to receive the Word, the first to carry Him to others, and the first to proclaim His greatness in her Magnificat.

The Rosary is not just a devotion-it is a school of contemplation and mission. As we meditate on the mysteries of Christ through Mary's eyes, we are sent forth to live those mysteries in the world-with joy, courage, and compassion.

I encourage all families, SCCs, and parish groups to revive the practice of praying the Rosary daily, especially during this month. Through Mary, may our hearts be formed to say "Yes" to the mission of the Church.

**Celebrate Mission Sunday in a Grand Manner**

This year, I urge all our parishes, institutions, schools, and religious communities to prepare for Mission Sunday (19 October) with prayerful fervour and outward joy. Let it be a grand diocesan celebration marked by :

- Meaningful liturgies and missionary homilies
- Mission exhibitions and cultural programs
- Rosary processions and children's rallies
- Mission collections with generosity of heart towards the Universal Solidarity Fund
- Outreach to the poor and marginalized

Let us show our solidarity with the Universal Church, especially with the missions in remote and difficult regions of the world. The missionary contribution of our diocese, both in personnel and in spiritual and material support, is a sign of our communion with the Body of Christ worldwide.

Let our youth and catechism teachers take the lead in organizing missionary awareness programs. Let every child know that they are a “little missionary.” Let every parish resound with the spirit of going forth!

**From Maintenance to Mission**

The Spirit is inviting us to move from maintenance to mission, from inward focus to outward zeal, from fear to hope. As “heralds of hope among the people,” may we carry the Gospel into our families, streets, villages, and digital spaces-not just in words, but in joyful witness.

Let us entrust our missionary efforts to Our Lady of the Rosary, the Queen of Missions, and be strengthened by her maternal intercession.

With mercy and hope,

**+ Ambrose Pitchaimuthu**
Bishop of Vellore

## HOLY FATHER INTENTION



For Collaboration Between Different Religious Traditions

Let us pray that believers in different religious traditions might work together to defend and promote peace, justice, and human fraternity.

## BISHOP'S PROGRAMME

| | | | |
|---|---|---|---|
| 3 | Wed | | Achirapakkam |
| 4 | Sat | | Randam Korattur |
| 5 | Sun | | Haffieldspet |
| 6 | Mon | | Meeting, Chennai |
| 7 | Tue | | Gengapattu |
| 10 | Fri | M | Sacred Heart Provincialate |
| | | E | Tambaram |
| 11 | Sat | | Priestly Ordination, Loyola College, Chennai |
| 12 | Sun | | Tiruvannamalai |
| 15 | Wed | | Nungampakkam |
| 17 | Fri | | Holy Cross Convent Golden Jubilee, Sathuvachari |
| 18 | Sat | M | St. Margaret -Sacred Heart province |
| | | E | Tirupattur |
| 19 | Sun | | Polur |
| 21-23 | | | PMO, Bangalore |
| 24 | Fri | | Senate Meeting |
| 26 | Sun | | Gandhi Nagar, Vellore |
| 27 | Sat | | Sathuvachari |
| 29 | Wed | | Monthly Recollection, Vellore |

## BIRTHDAY

| | | |
|---|---|---|
| 1 | Fr. S.Lazar Savarimuthu | 02-10-1951 |
| 2 | Fr. D.Arockiasamy | 06-10-1978 |
| 3 | Fr. S.Velankanni | 09-10-1986 |
| 4 | Fr. P.Albin Justus | 14-10-1953 |
| 5 | Fr. P.Alexander | 24-10-1967 |
| 6 | Fr. S.Paularasu | 28-10-1977 |

# VICAR GENERAL OFFICE

## Annual Retreat - Diocesan Priests of Vellore

Our Lady of Vellankanni Shrine
(9th to 14th November - 2025)

Dear Rev. Fathers,

Greetings to you in Jesus and our blessed Mother Mary !

We shall have our Annual Retreat from November 9th 8pm to 14th afternoon 2025 at Our Lady of Vellankanni Retreat Centre. All of us are asked to attend the retreat without fail. Anyone seeking exemption kindly inform the Bishop well in advance.

Arriving the retreat center could be on your own. As usual TA will be paid. Appreciating your cooperation.

**Note :**

Please take with you

1. Holy Bible & breviary
2. Cassock
3. Mass Diary both Parish and Personal
4. Toiletry Items

Please pray for a fruitful Retreat and request your parishioners to pray for us.

Sincerely yours in Christ,

Rev. Msgr. **M.John Nicholas**
Vicar General

# Monthly Recollection

Dear Reverend Fathers, Greetings to all !

We cordially invite you to a monthly recollection at the Bishop's House on October 29, 2025 (Wednesday). The occasion will also mark a special celebration - the Silver Jubilee celebration of Fr. A. Lourdu Xavier, Fr. M. Iruthaya Samy and Fr. N. Arockia Doss.

The program schedule is as follows:

9:30 AM - Arrival

10:00 AM - Talk

11:15 AM - Tea Break

11:30 AM - Silver Jubilee Celebration Mass

12:30 PM - Felicitation

1:00 PM - Lunch

2:30 PM - Adoration and Confession

3:30 PM - Announcements

4:00 PM - Departure

Note : Kindly bring your cassock for the Mass.

Looking forward to your presence!

Best regards
**Rev. Msgr. M. John Nicholas**
Vicar General

# PROCURATOR'S OFFICE

## Good Friday Collection - 2025

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Chengam | 11750 |
| 2 | Kilnathur | 5000 |
| 3 | Kolappalur | 4000 |
| | **TOTAL** | **20750** |

Thanks for all those who have already remitted the Good Friday Collection and May I request to give those who have not yet given.

**Fr. S. Richard Peraira**
Procurator

## அருங்கொடை இயக்கம்

வேலூர் மறைமாவட்ட அருங்கொடை அருட்பணியாளர்களுக்கான தியானம் காஞ்சிபுரம் தூசி மாமண்டூர் புதிய ஜெருசலேம் தியான இல்லத்தில் நடைபெற்றது. நமது மறை மாவட்டத்தில் இருந்து 18 அருங்கொடை அருட்பணியாளர்கள் தியானத்தில் பங்கெடுத்தார்கள். அருட்தந்தை ஜோமிக்ஸ் அவர்களும் பாண்டி கடலூர் உயர்மறை மாவட்ட பேராயர் மேதகு கலிஸ்ட் அவர்களும் நம்முடைய மறைமாவட்ட அருங்கொடை மூத்த குருக்கள் அருட்பணி அக்டேவியஸ் அவர்களும் அருட்பணி அந்தோணிராஜ் அவர்களும் தியான கருத்துக்களை வழங்கினார்கள். இந்த அரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த நமது மறைமாவட்ட ஆயர் அவர்களுக்கும் எங்களோடு இணைந்து தியானத்தில் பங்கெடுத்து உதவியாக இருந்த மறை மாவட்ட முதன்மை குரு அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி. மறைமாவட்ட பொருளாளர் தந்தை அவர்களுக்கும், இட ஏற்பாடுகளையும், உணவு ஏற்பாடுகளையும் செய்து கொடுத்த புனித அடைக்கல அன்னை சபை அருட்சகோதரிகளுக்கு நன்றி.

அருட்பணி. **P.J. வின்சென்ட்**

## மேய்ப்புப்பணி மையம்

### பள்ளி மறைக்கல்வி / நன்னெறி ஆசிரிய பெருமக்களுக்கு ஒரு நாள் கருத்தரங்கு வேலூர் மற்றும் திருவண்ணாமலை மறைவட்டத்தில்

**மறைக்கல்வி / நன்னெறிகல்வி கருத்தரங்கு :**

வேலூர் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து கிறிஸ்துவ பள்ளிகளில் பணிபுரியும் மறைக்கல்வி / நன்னெறிகல்வி ஆசிரிய பெருமக்களுக்கு ஒரு நாள் கருத்தரங்கு திருவண்ணாமலை 13.09.2025 சனிக்கிழமை மற்றும் வேலூரில் 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திண்டிவனம் மறைக்கல்வி பணிக்குழுவின் செயலர் அருள்பணி, பெனடிக்ட் M.D.ஆனலின் அவர்கள், ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்தார். 13.09.2025 அன்று திருவண்ணாமலை மறைவட்டத்தில் நடைபெற்ற கருத்தரங்கில், 98 பேர் கலந்துக்கொண்டார்கள். 14.09.2025 அன்று வேலூர் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் 75 பேர் கலந்துக்கொண்டார்கள். கருத்தாளர் அருள்பணி. பெனடிக்ட் M.D.ஆனலின் அவர்கள் தமது கருத்துரையில் மறைக்கல்வி / நன்னெறி பாடத்திற்க்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்றும் மேலும் இன்றைய சூழ்நிலையில் பிள்ளைகளின் மனநிலைக்கு ஏற்ப மறைக்கல்வி / நன்னெறி கற்பித்தல் மிக அவசியமென்பதையும் தெளிவுபடுத்தினார். ஆசிரியர்கள் பெற்றோர்களாக மாறி பிள்ளைகள் ஒழுக்கத்திலும், இயேசுவின் மதிப்பீடுகளின்படி வாழ கற்றுக்கொடுப்பது மிக முக்கியம் என்பதை வலியுறுத்தி பேசினார். ஆசிரியர்கள் உற்சாகத்துடன் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். பின்னர் ஆசிரியர்களிடம் கருத்தரங்கின் கருத்துகள் விவாதிக்கப்பட்டது. அனைத்து ஆசிரியர்கள் இக்கருத்தரங்கு மிகவும் பயனுயுள்ளதாக இருந்தது என்று கூறினர். இறுதியாக இயக்குநர் தந்தை அருட்பணி. N.T.இருதயராஜ் அவர்கள் ஆசிரியர்களுக்கு வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்தார். மேலும் ஆசிரியர்களை அனுப்பி வைத்த பள்ளி தாளாளர்கள் மற்றும், தலைமையாசிரியர்களுக்கு நன்றி தெரிவித்து கொண்டார். இக்கருத்தரங்கு நடைபெற ஒத்துழைப்பு கொடுத்த திருவண்ணாமலை மறைகோட்ட முதன்மைகுரு பேரருட்பணி S.லூர்துசாமி மற்றும் அருட்பணி. அமுதன், உதவி பங்குதந்தை, வேதியர் தேவராஜ்

அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார். இக்கருத்தரங்கை நன்முறையில் நடத்தி கொடுத்த கருத்தாளர் அவர்களுக்கும் நன்றி கூற இக்கருத்தரங்கு இனிதே நிறைவு பெற்றது...

**வேட்டவலம் புனித மரியாயின் தூய நெஞ்ச பங்கில் பங்குப்பேரவை உருவாக்கம் :**

பங்குதந்தை அருட்பணி. A.ஆரோக்கியசாமி அவர்களால் பங்குப்பேரவையின் நோக்கம் செயல்பாடுகள் குறித்த விளக்கங்கள் அளித்தபின் பங்குப்பேரவைக்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க கொத்து நாட்டார்கள், அன்பிய தலைவர்கள் மற்றும் அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற்றது. பங்குப்பேரவை துணை தலைவர், செயலர், பொருளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேய்ப்புப்பணியின் திட்டம் மற்றும் இணைந்து செயல்படுதல் பற்றிய பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டபின் பங்குப்பேரவை துணை தலைவர், செயலர் மற்றும் பொருளர் ஆகியோர்க்கு 21.09.2025 அன்று ஞாயிறு காலை திருப்பலியில் பங்குதந்தை அருட்பணி. A. ஆரோக்கியசாமி, உதவி பங்குதந்தை G.சூசைராஜ் IVD அன்பிய குழுக்கள் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட துணை தலைவர், செயலர் மற்றும் பொருளர் ஆகியோர்க்கு வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் அருட்பணி. N.T. இருதயராஜ் அவர்களால் பணிப்பொறுப்பு அளிக்கப்பட்டது. பணிப் பொறுப்பிற்கான உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்கள். பங்குப்பேரவை உறுப்பினர்களுக்கு இயக்குநர் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்தார்.

**பங்குப்பேரவை உருவாக்கம் பெருந்துறைபட்டு :**

தூய காணிக்கை அன்னை ஆலய பங்கில் ஆகஸ்ட் மாதம் 23 முதல் 27 வரை வேதியர் சாமுவேல் அவர்களால் அனைத்து அன்பியங்களை ஒன்றுக்கூட்டி பங்குப்பேரவையின் நோக்கம், பேரவை செயல்பாடுகள் பற்றி அன்பிய குழுக்களுக்கு விளக்கப்பட்டது. பின்னர் அன்பியங்களிருந்து பங்குப்பேரவை உறுப்பினர்கள் நியமன உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்றது. பங்குப்பேரவை துணை தலைவர் செயலர் மற்றும் பொருளர்

தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 27.09.2025 அன்று ஞாயிறு காலை திருப்பலியில் பங்குதந்தை அருட்பணி. A. ஜெயசீலன், அன்பிய குழுக்கள் முன்னிலையில் வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புபணி நிலைய இயக்குநர் அருட்பணி. N.T. இருதயராஜ் அவர்களால் பணிபொறுப்பு அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குப்பேரவை உறுப்பினர்கள் பணிப் பொறுப்பிற்கான உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்கள். இயக்குநர் அவர்கள் பங்குதந்தையும், பங்குபேரவை உறுப்பினர்களையும் பாராட்டினார்.

## அக்டோபர் மாத திருமண தயாரிப்பு வகுப்புக்கள்

| | |
|---|---|
| 04.10.2025 - 05.10.2025 | : மாதத்தின் முதல் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை |
| இடம் | : உலக மாதா ஆலயம் - திருவண்ணாமலை |
| சனிக்கிழமை | : காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை |
| ஞாயிற்றுக்கிழமை | : காலை10.30மணி முதல் மாலை4.00மணிவரை |
| 11.10.2025 - 12.10.2025 | : மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை |
| இடம் | : தூய இருதய ஆண்டவர் ஆலயம் - வந்தவாசி |
| சனிக்கிழமை | : காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை |
| ஞாயிற்றுக்கிழமை | : காலை10.30மணி முதல் மாலை 4.00மணிவரை |
| 18.10.2025 - 19.10.2025 | : மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை |
| இடம் | : ஆயர் இல்லம் - வேலூர் |
| சனிக்கிழமை | : காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை |
| ஞாயிற்றுக்கிழமை | : காலை10.30 மணி முதல் மாலை4.00 மணிவரை |

## JOURNEY OF HOPE (BLESSING OF JUBILEE CROSS) DEANERY CENTRE VANDAVASI (Oct 09 to Nov 08)

1. Sacred Heart Church – Vandavasi (Oct 09 – Oct 11)
2. St. Don Bosco Church – Mazhuvankarunai (Oct 12 - Oct 14)
3. Christ the king Church – Nelliyankulam (Oct 15 - Oct 17)
4. St. Antony Church - Nallur (Oct 18 - Oct 20)
5. St. Theresa of Child Jesus Church - Theresapuram (Oct 21 - Oct 23)
6. Sts. Peter and Paul church - Japthikarani (Oct 24 – Oct 26)
7. St. Antony Church – Thirumalpadi (Oct 27 –Oct 29)
8. St. Francis Xavier church – Parasur (Oct 30 - Nov 1)
9. Our Lady of Dolours church – Thiruvettipuram (Cheyyar) (Nov 2 – Nov 5)
10. St. Antony church – Sirungatoor (Nov 6 - Nov 8)

## DEANERY CENTRE ARAKKONAM (Nov 09 to Dec 10)

1. St. Antony church – Arcot (Nov 9 – Nov 11)
2. Our Lady of Vellanganni church - Ranipet (Nov 12 - Nov 14)
3. Sacred Heart of Jesus church – Arakkonam (Nov15 – Nov 25)
   **(Jubilee cross will be placed at Sacred Heart of Jesus church for pilgrim)**
4. St. Theresa church – Haffieldspet (Nov26 –Nov 28)
5. Mary help of Christians church - Uriurkuppam (Nov 29 - Dec 01)
6. St. Francis Xavier Church - Soganur (Dec 2 - Dec 4)
7. Our Lady of Perpetual Succour Church - Alappakkam (Dec 5 Dec 7)
8. St. Thomas Church – Sipcot (Dec 8 - Dec10)

இறைப்பணியில் அன்புடன்
அருட்பணி. **N.T.இருதயராஜ்**
இயக்குநர், மேய்ப்புப்பணி மையம், வேலூர்

## வேலூர் மற்றும் திருவண்ணாமலை சமூக சேவை சங்கங்கள்

29.08.2025 : அன்று சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை M.அமலநாதன் அவர்கள் வந்தவாசி தூய இருதய ஆண்டவர் கோல்பிங் இயக்கத்தை சந்தித்தார். இயக்குநர் தந்தையுடன் வந்தவாசி மறைவட்ட முதன்மை குரு அருட்பணி. M.மார்டின், திரு. இராஸ் லூயிஸ், திரு. சவரிநாதன் மற்றும் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார் ஆகியோர் உடனிருந்தனர். கோல்பிங் குழுவில் உள்ள பிரச்சினைகள் மற்றும் தேவைகளை உறுப்பினர்கள் இயக்குநர் தந்தையிடம் எடுத்துரைத்தார்கள். பிரச்சனைகளுக்கு தீர்வும் மற்றும் தேவைகளை நிறைவேற்றி தருவதாகவும் இயக்குநர் தந்தை உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

31.08.2025 : அன்று திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் அவர்கள் வேட்டவலம் கோல்பிங் குழுக்கள் மற்றும் மகளிர் குழுக்களை சந்தித்து அவர்களின் நிறை குறைகளை கேட்டறிந்தார். இயக்குநர் தந்தையுடன் வேட்டவலம் மறைவட்டத்தின் முதன்மை குரு அருட்பணி ஆரோக்கியசாமி, திட்ட அலுவலர் திரு. இன்பசேகர், கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார் ஆகியோர் உடனிருந்தனர். உறுப்பினர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதாக இயக்குநர் தந்தை தெரிவித்தார். செயல்பாடற்று இருந்த கோல்பிங் மற்றும் மகளிர் குழுக்களை மறுசீரமைப்பு செய்து தொடர்ந்து செயல்பட ஆவண செய்தார்.

03.09.2025 : அன்று இயக்குநர் தந்தையர்கள் அருட்பணி M.அமலநாதன் மற்றும் அருட்பணி S.பிரான்சிஸ் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் இந்திரவனம், செம்மாபாடி, நமத்தோடு மற்றும் கெங்காபுரம் முதலான பங்குகளுக்கு

சென்று கோல்பிங் குழுக்களை சந்தித்து தனிநபர் மற்றும் குழுக்கள் எவ்வாறு வருமானத்தை பெருக்குவது மற்றும் சிறுதொழிலின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு தந்தார். 14.09.2025 அன்று நடைபெற இருக்கும் சிறுதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கிற்கு முன்னோட்டமாக சிறுதொழில் விழிப்புணர்வு கருத்திரங்கிற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றி விளக்கி கூறினார்.

04.09.2025 : அன்று இயக்குநர் தந்தையின் அறிவுறுத்தலின்படி கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் பாராசூர் சென்றார். பங்குத்தந்தையின் உதவியுடன் நான்கு புதிய கோல்பிங் குழுக்களை உருவாக்கினார். பங்குத்தந்தைக்கு இயக்குநர் தந்தையின் சார்பாக வாழ்த்துக்களும் நன்றிகளும்.

11.09.2025 : அன்று வேலூர் மறைவட்டம் முதன்மைகுரு அருட்பணி ராய் லாசர் தலைமையில் அகரம்சேரியில் உள்ள மெசியாவின் ஆன்மிக மையத்தில் நடைபெற்ற அருட்தந்தையர்களின் மாதாந்திர கூட்டத்திற்கு சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை மற்றும் பணியாளர்கள் கலந்துக்கொண்டனர். இயக்குநர் தந்தையின் அறிவுறுத்தலின்படி விவசாய சங்கம், மகளிர் சங்கம், கோல்பிங் இயக்கம் முதலான அமைப்புகளின் தற்போதைய செயல்பாடுகளை பணியாளர்கள் விளக்கிக் கூறினார்கள். இயக்குநர் தந்தை மாணவ, மாணவியர்களின் கல்வி உதவித்தொகை அதன் வழிமுறைகளை விளக்கினார். அருட்பணி A.ஸ்டீபன் மாலை நேர சிறப்பு வகுப்புகள், செயல்பாடுகள், கண்காணிப்பு மற்றும் ஒழுங்கு முறைகளை தெளிவுப்படுத்தினார்.

14.09.2025 : அன்று இந்திரவனத்தில் சிறுதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. இதில் வேலூர் மற்றும் திருவண்ணாமலை சமூக சேவை சங்கங்களின் இயக்குநர் தந்தையர்கள் முன்னின்று வழிநடத்தினார்கள். இந்த கருத்தரங்கில் கொழப்பலூர் பங்குதந்தை

அருட்பணி. பால் வேளங்கண்ணி மற்றும் கெங்காபுரம் பங்குதந்தை அருட்பணி. செல்வம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு சிறுதொழில் பற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். வேலூர் சமூக சேவை சங்கத்தின் கணக்காளர் திரு. E.இராஸ் லூயிஸ், திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் திட்ட அலுவலர் திரு. இன்பசேகர், விவசாய சங்கத்தின் தலைவர் திரு. சவரிநாதன் ஆகியோர் கலந்துக்கொண்டு சிறுதொழில் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். இந்த கருத்தரங்கில் இந்திரவனம், செம்மாபாடி, நமத்தோடு மற்றும் கெங்காபுரம் போன்ற இடங்களில் உள்ள கோல்பிங் உறுப்பினர்கள் 90 பேர் கலந்துக்கொண்டு பயன் பெற்றார்கள். இந்நிகழ்சிகளை கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார் ஒருங்கிணைத்தார்.

**விற்பனை பொருட்களின் விவரம் மற்றும் வெளியீடு :**

செம்மாபாடி கோல்பிங் குழுக்கள் பினாயல் (Phenyl) தயாரித்து அதன் செயல்முறைகள் பற்றியும் இதன் மூலம் கிடைக்கும் வருமானம் பற்றியும் விளக்கி கூறினார்கள்.

தேநீர் தூள் மொத்தமாக வாங்கி கோல்பிங் தேநீர் தூள் என்ற பெயரில் அதை சில்லரை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபம் மற்றும் அதன் வழிமுறைகள் பற்றி கூறினார்கள்.

விழா அலங்கார பொருட்கள் தயாரித்து சிறுதொழில் செய்யும் முறைகள் பற்றியும் அதன் செயல்பாடுகள் மற்றும் இதனால் வருகின்ற வருமானம் பற்றியும் கெங்காபுரம் கோல்பிங் உறுப்பினர்கள் கூறினார்கள்.

மெழுகுவர்த்தி செய்யும் முறைகள் மற்றும் அதனை சந்தைப்படுத்தும் வழிமுறைகள் பற்றி இந்திரவனம் கோல்பிங் உறுப்பினர்கள் கூறினார்கள். இப்பொருட்களை அருட்பணி S.பிரான்சிஸ் மற்றும்

அருட்பணி M.அமலநாதன் செபம் செய்து ஆசிர்வதித்து விற்பனையை தொடங்கி வைத்தார்கள். உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டு மகிழ்ந்தார்கள்.

குறிப்பு : பங்குதந்தையர்கள் தங்கள் பங்கின் இறைமக்களுக்கு அறிவித்து இப்பொருட்களை வாங்கி பயன்பெறவும் ஊக்கப்படுத்தவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

21.09.2025 : அன்று திருவண்ணாமலை சமூக சேவை சங்க அலுவலகத்தில் மாலைநேர வகுப்பு ஆசிரியர்களுக்கு சிறப்பு கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கலந்தாய்வு கூட்டத்தை திருவண்ணாமலை மற்றும் வேலூர் சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் தந்தையர்கள் முன்னின்று வழிநடத்தினார்கள். வேலூர் மற்றும் திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் பணியாளர்கள் கலந்துக்கொண்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்தார்கள். இதில் திருவண்ணாமலை, வேட்டவலம், போளூர், சேத்துப்பட்டு போன்ற மறைவட்டத்தில் உள்ள 58 ஆசிரியர்கள் கலந்துக்கொண்டார்கள். அருட்பணி S.பிரான்சிஸ் அவர்கள் ஆசிரியர்கள் வகுப்புகள் எடுக்கும் முறைகள், பாடத்திட்டங்கள், மாணவ மாணவிகளின் எண்ணிக்கை, வருகைப் பதிவேடு மற்றும் எந்த நேரத்தில் வகுப்புகள் நடத்துவது பற்றி தெளிவாக ஆசிரியர்களுக்கு விளக்கி கூறினார். அருட்பணி M.அமலநாதன் அவர்கள் மாலைநேர வகுப்பின் எதிர்கால திட்டங்கள் பற்றியும், கற்பிக்க வேண்டிய பாடங்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவ, மாணவிகளிடம் நடந்துக்கொள்ளும் முறைகள் பற்றியும் விளக்கிக் கூறினார். ஆசிரியர்கள் மாலை நேர வகுப்பில் சந்திக்கும் பிரச்சனைகள், தேவைப்படும் உதவிகள் மற்றும் தன்னிடம் படிக்கும் மாணவ மாணவியர்களின் வெற்றிகளை பகிர்ந்துக்கொண்டார்கள்.

திரு. இராஸ் லூயிஸ் அவர்கள் நன்றி கூறினார். இந்நிகழ்வுகளை திரு. இன்பசேகர் ஒருங்கிணைத்தார்.

22.09.2025 : அன்று வேலூர் மற்றும் திருவண்ணாமலை சமூக சேவை சங்கங்களின் மேனாள் இயக்குநர் தந்தையர்களுக்கான ஆலோசனை கூட்டம் ஆயர் இல்லத்தில் நடைப்பெற்றது. இந்நிகழ்விற்கு வேலூர் மறைமாவட்டத்தின் முதன்மை குரு பேரருட்பணி M.ஜான் நிக்கோலஸ் தலைமை தாங்கினார். இந்த ஆலோசனை கூட்டத்தை VSSS இயக்குநர் தந்தை அருட்பணி. M.அமலநாதன் மற்றும் TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் ஆகியோர் முன்னின்று வழிநடத்தினார்கள். தொடக்க செபம் திரு. இராஸ் லூயிஸ் அவர்களால் செபிக்கப்பட்டது. அருட்பணி. S.பிரான்சிஸ் அவர்கள் அனைத்து இயக்குநர் தந்தையர்களையும் வரவேற்றார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் விவசாய சங்கம் மற்றும் அதனுடைய தற்போதைய செயல்பாடுகளை திரு. சவரிநாதனும், மகளிர் சங்கம் தோற்றம் அதன் செயல்பாடுகளை திருமதி. செலின் அவர்களும், கோல்பிங் இயக்கம் மற்றும் தற்போதைய செயல்பாடுகளை திரு. ஏசுகுமார் அவர்களும் கூறினார். மாலைநேர சிறப்பு வகுப்பு மற்றும் அதன் செயல்பாடுகளை திரு. இன்பசேகர் விளக்கிக் கூறினார். இலங்கைவாழ் புலம் பெயர்ந்தேரின் தற்போதைய தேவைகள் பற்றி திட்ட மேலாளர் திரு. பேட்ரிக் எடுத்துரைத்தார். BOB LOUISE கல்வி உதவித்தொகை மற்றும் அதனுடைய வழிமுறைகளை பற்றி அருட்பணி M.அமலநாதன் விளக்கிக் கூறினார். மேனாள் இயக்குநர் தந்தையர்களும் சமூக சேவை சங்கங்கள் வருகின்ற காலத்தில் சிறப்பாக செயல்பட பல்வேறு கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார்கள். அருட்பணி A.ஸ்டீபன் அவர்கள் நன்றி கூறினார்.

## HUNGER & DISEASE FUND COLLECTION - 2025

| S.NO. | DATE | PARISHES | AMOUNT [RS.] |
|---|---|---|---|
| 1 | 28.08.2025 | Chengam | 4,080 |
| 2 | 01.09.2025 | Kilnathur | 5,000 |
| 3 | 10.09.2025 | Sanipoondi | 1,000 |
| 4 | 15.09.2025 | Kolapalure | 3,000 |
| 5 | 15.09.2025 | Udayendiram | 4,000 |

பசிப்பிணி போக்கும் திட்டத்திற்கு

குறிப்பு :- பங்குதந்தையர்களும், இறைமக்களும் தாராளமாக நிதி வழங்கியமைக்கு நன்றியும் செபமும்.

அருட்திரு. **S.பிரான்சிஸ்**
இயக்குநர், TVMSSS
திருவண்ணாமலை

அருட்திரு. **M. அமலநாதன்**
இயக்குநர், VSSS
ஆயர் இல்லம், வேலூர்

## RIP

I have fought the good fight, I have finished the race, I have kept the faith” (2Timothy 4:7)



**Rev. Fr. P. Albin Justus**
(14.10.1953 - 30.09.2025)

May He rest in Peace!

## திருவண்ணாமலை சமூக சேவை சங்கம்

05.9.2025: திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் மாதர் சங்க உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் பெருந்துறைப்பட்டு பங்கில் காலை 11.00 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி. ஜெயசீலன் மற்றும் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் மற்றும் TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்பசேகர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றுது. இந்த கூட்டத்தில் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து கருத்துகள் பகிரப்பட்டது. புதிய குழுக்களை உருவாக்குவது என தீர்மானிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் 30 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

5.9.2025 : இளையாங்கண்ணி பங்கில் செயல்படும் மாதர் சங்கம், சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் மதியம் 2.00 மணியளவில் TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்பசேகர் இவர்கள் முன்னிலையில் நடைபெற்றுது. இந்த கூட்டத்தில் குழுக்களை மீண்டும் வலுப்படுத்தி புதிய குழுக்கள் உருவாக்க வேண்டும் என கருத்துகள் பகிரப்பட்டது. இந்த கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் 15 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

13.9.2025: வேட்டவலம் பங்கில் செயல்படும் மாதர் சங்கம், விவசாய சங்கம் மற்றும் கோல்பிங் உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் மாலை 3.00 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியசாமி மற்றும் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் மற்றும் TVMSSS திட்ட

மேலாளர் திருமிகு. இன்பசேகர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றுது. இந்த கூட்டத்தில் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து கருத்துகள் பகிரப்பட்டது. புதிய குழுக்களை உருவாக்குவது என தீர்மானிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் 45 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

14.9.2025 : கொழுப்பலூர் பங்கு மற்றும் கிளைப்பங்கில் செயல்படும் கோல்பிங் சங்க உறுப்பினர்களுக்கு வாழ்வாதார தொழில் பயிற்சி காலை 11.00 மணியளவில் இந்திரவனம் ஆலயத்தில் நடைபெற்றது. இயக்குநர் தந்தையர்கள் அருட்பணி S.பிரான்சிஸ், அருட்பணி. M.அமலநாதன் மற்றும் பங்குத்தந்தை அருட்பணி. பால் வேளாங்கண்ணி மற்றும் கெங்காபுரம் பங்குதந்தை அருட்பணி. செல்வம் இவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. பயிற்சிகளை TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்பசேகர் மற்றும் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார் ஆகியோர் வழங்கினர். இந்த கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் உற்பத்தி செய்த பெனாயில், மெழுகுவத்தி மற்றும் டீத்துாள் ஆகியவை விற்பனைக்கு வைக்கப்பட்டன. இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள 75 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

21.9.2025 : புலிவானந்தல் பங்கில் செயல்படும் மாதர் சங்க உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் காலை 9.30 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி. அருள்தாஸ் மற்றும் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் மற்றும் TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்பசேகர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றுது. இந்த கூட்டத்தில் புதிய குழுக்களை

உருவாக்கி செயல்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் 25 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

21.9.2025: திருவண்ணாமலை, வேட்டவலம், சேத்துப்பட்டு மற்றும் போளூர் ஆகிய மறைக்கோட்டங்களில் செயல்படும் மாலை நேர வகுப்பு ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு கூட்டமானது திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. இயக்குநர் தந்தையர்கள் அருட்பணி S.பிரான்சிஸ், அருட்பணி. M.அமலநாதன் இவர்கள் தலைமையில் நடைபெற்றுது. இந்த கூட்டத்தில் மாலை நேர வகுப்பின் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு, எதிர்கால செயல் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இந்த கலந்தாய்வு கூட்டத்தில் 53 ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

செய்தி தொகுப்பு

அருட்பணி. **S.பிரான்சிஸ்**
இயக்குநர்

திரு. **Y. தாமஸ் இன்பசேகர்**
TVMSSS திட்ட மேலாளர்.



# மரியாயின் சேனை

24.08.25 ஞாயிறன்று பிற்பகல் 3 மணிக்கு காட்பாடி மரியாயின் சேனை நிர்வாக சபை கியூரியா தங்கள் கிளைப் பங்குகளுடன் சேர்ந்து சேனையின் அண்டு இறுதி விழாவான வாக்குறுதி புதுப்பிக்கும் ஆச்சேஸ் விழா நடைபெற்றது. அருட்பணி. வின்சென்ட் பிரபு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவர் சேனையின் உறுப்பினராக இருப்பதின் மேன்மையை விளக்கினார். கொமித்சிய அலுவலர்கள் சிறந்த சேவைக்கு வாழ்த்து கூறி, மேலும் சிறந்து பணியாற்ற கேட்டுக் கொண்டனர். மொத்தம் 35 உறுப்பினர்கள் பங்கேற்றனர். வருகைதந்த அனைவருக்கும் சிற்றுண்டி தேனீர் கியூரியா வழங்கியது.

31.08.25 ஞாயிறு அன்று சந்தவாசல் கியூரியாவை பார்வையிட்டு பேரருட்பணி ஜெயப்பிரகாசம் தலைமையில் பொறுப்பாளர்கள் புதிதாக தேர்வு செய்து அவர்களின் கடமைகள் பின்பற்ற வேண்டிய பொறுப்புகளை விளக்கிக் கூறினார். கொமித்சிய அலுவலர்களால் மொத்தம் 18 சேனையாளர்கள் பங்கேற்றனர். வருகைதந்த அனைவருக்கும் தேனீர் பிஸ்கட் வழங்கப்பட்டது.

13.09.25 சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை திருஇருதய அன்னை கியூரியா வேட்டவலத்தில் ஆச்சேஸ் விழா நடைபெற்றது. இதில் பேரருட்பணி. பால் போஸ்கோ தலைமையில் பேரருட்பணி. ஆரோக்கியசாமி முன்னிலையில் விழா மிகச்சிறப்பாக ஆரம்பமானது. வேட்டவலம் கிளைப்பங்கு தந்தையர்கள் நால்வர் பங்கேற்று அனைவரும் வாழ்த்துரை வழங்கினர். மொத்தம் 89 சேனையாளர்கள் பங்கேற்று அன்னைக்கு வாக்குறுதி வழங்கினர். கொமித்சிய அலுவலர்களும் வாழ்த்தினர். இறுதியில் பேரருட்பணி.

பால்போஸ்கோ சிறப்பு திருப்பலி நிகழ்த்தினார். வருகைதந்த அனைவருக்கும் சிறப்பு உணவு வழங்கப்பட்டது.

14.09.25 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு வேலூர் ஆயர் இல்ல வளாகத்தில் ஜூபிலி அரங்கில் மேல் நிர்வாக சபை (கொமித்சியக்) கூட்டம் நடைபெற்றது. 5 முதல் 6 பிரசிடியங்களின் அலுவலர்கள் மொத்தம் 25 பேர் கலந்துகொண்டு தங்களின் அறிக்கையை சமர்பித்தனர். மாலை 4.30 மணி தேனீருடன் கூட்டம் நிறைவுற்றது.

21.09.25 ஞாயிறு காலை 10 மணியளவில் தூய லூர்தன்னை திருத்தலம், சேத்துப்பட்டு கியூரியா ஆன்மிக இயக்குநர் மற்றும் விக்காரியேட்டின் அதிபர் தந்தை I.ஜான் ராபர்ட் அடிகளார் தலைமையில் ஆச்சேஸ் விழா நடைபெற்றது. 9 கிளைப்பங்குகளிலிருந்து சேனையார் 133 பேர் சீருடையுடன் பங்கேற்றனர். 4 அருட்தந்தையர்களும், முதன்மை குருவும், மாதாமலை அருட்பணியாளர்களும் மற்ற அருட்தந்தையர்கள் வாழ்த்துரை வழங்கினர். கொமித்சிய பொறுப்பாளர்களும் வாழ்த்தியபின் தங்களின் வாக்குறுதி புதுப்பித்தபின் நற்கருணை ஆசீருடன் விழா நிறைவு பெற்றது. வருகைதந்த அனைவருக்கும் திருத்தல அதிபர்தந்தையால் சிறப்பு பகல் உணவு வழங்கப்பட்டது.

மரியே வாழ்க
சகோ. **இரத்தினா மேரி**
கொ. செயல் தலைவி

## CALANDER

### October 2025

| | | |
|---|---|---|
| 1 | Wed | St. Teresa of Calcutta |
| 2 | Thu | Guardian Angels |
| 4 | Sat | St. Francis of Assisi |
| 5 | Sun | $27^{th}$ Sunday in Ordinary Time |
| 6 | Mon | Blessed Marie - Rose Françoise Pelles Pavy or Bruno |
| 7 | Tue | Our Lady of the Rosary |
| 9 | Thu | St. Denis and Companions, Martyrs or St. John Leonardi, Priest |
| 11 | Sat | Pope St. John XXIII |
| 12 | Sun | $28^{th}$ Sunday in Ordinary Time |
| 14 | Tue | Pope St. Callistus I, Martyr |
| 15 | Wed | St. Teresa of Avila |
| 16 | Thu | St. Hedwig of Poland or St. Margaret Mary Alacoque- |
| 17 | Fri | St. Ignatius of Antioch |
| 18 | Sat | St. Luke the Evangelist |
| 19 | Sun | $29^{th}$ Sunday in Ordinary Time |
| 22 | Wed | Pope St. John Paul II |
| 23 | Thu | St. John of Capistrano |
| 24 | Fri | St. Anthony Mary Claret, Bishop |
| 26 | Sun | $30^{th}$ Sunday in Ordinary Time |
| 28 | Tue | Sts. Simon and Jude, Apostles |



# NECROLOGY

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. Joseph Parampet | 01.10.1989 |
| 2 | Rev. Fr. P. K. Antony SDB | 02.10.1983 |
| 3 | Rev. Fr. J. Martin SDB | 03.10.1986 |
| 4 | Rev. Fr. V. P. Antony Samy | 03.10.2000 |
| 5 | Rev. Fr. A.Devadoss | 04.10.1989 |
| 6 | Rev. Fr. Edward Giterrez SDB | 08.10.1976 |
| 7 | Rev. Fr. R.Fathimanathan | 10.10.2020 |
| 8 | Rev. Fr. Maggioni SDB | 21.10.1983 |
| 9 | Rev. Fr. Mary Sochi SDB | 24.10.1974 |
| 10 | Rev. Fr. Henry Remeri SDB | 24.10.2000 |
| 11 | Rev. Fr. G.Antoni Adimai | 24.10.2010 |
| 12 | Rev. Msgr. Menezes | 26.10.1994 |
| 13 | Rev. Fr. Varghees SDB | 27.10.1983 |
| 14 | Rev. Fr. Jose M. Lawrence | 27.10.2003 |
| 15 | Rev. Bro. Xavier Savarimuthu SDB | 28.10.1967 |



ONE MISSION,

One Body, One Church